# ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் கள்ளர் சரித்திரம் - அடையாள அரசியலின் உந்துவிசை

**முனைவர் சு. இராமர்**
முதுமுனைவர்ப்பட்ட ஆய்வாளர்
தமிழிற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

காலனியத்தின் பின்னான சூழல் அடையாள அரசியலின் உருவாக்கத்திற்கு வித்திட்டது என்பதைப் பலரும் ஒப்புக் கொள்கின்றனர். காலனியத்தால் உந்துவிசை பெற்ற இயக்கங்களே அடையாள இயக்கங்கள் எனலாம். காலனிய காலத்து அடக்குமுறை, பண்பாட்டுத் திணிப்பு ஆகியவை தமக்கான வரலாற்றைப் புனரமைப்பு செய்வதற்கானத் தேவையை உருவாக்கின. அரசியல், பொருளாதாரச் சூழலை மாற்றியமைக்கும்வகையில் இவ்வடையாள ஓர்மை செயல்பட்டது. இலக்கியம், பண்பாட்டு பெருமைகள் முதலானவற்றில் ஏற்பட்ட காலனியத்தின் பாதிப்பை ஈடுகட்டும்வகையிலும் அடையாள அரசியல் தோற்றம் பெற்றதெனலாம். அவ்வாறான மீள்கண்டுபிடிப்புகள் ஒரு சமூகத்தின் மீதான அடக்குமுறையை எதிர்க்கும் வல்லமையைத் தரும் எனலாம். ந.மு.வேங்கடசாமி நாட்டார் கள்ளர் சரித்திரம் நூலின்மூலம் வரலாற்றின்வழி கள்ளர் என்னும் சொல் கொண்டிருக்கும் பொருள்களை எடுத்தியம்பும் நோக்கு வெளிப்படுகிறது. ஆனால் அது கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்களின் வரலாற்றுப் பெருமிதங்களுக்கும் தமக்குக் கீழ் உள்ள மக்களை ஒடுக்குவதற்குமான உந்துவிசையைத் தருவதாக அமையும் ஆபத்தும் இருக்கிறது.

வரலாற்றை இடைவெட்டாகப் பார்க்கும் பார்வை சமீபகாலமாகத் தோற்றம் பெற்றிருக்கிறது. கள்ளர் சரித்திரம் நூல் கூறும் செய்திகள் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் கள்ளர்கள் என்ற பொருளைத் தருகின்றன. சோழ மன்னர்களும் அதற்குப் பிந்தைய அரசர்களும் கள்ளர்களே என்று கூறுகின்றன. கள்வர் கோமான் என்று புல்லி என்னும் மன்னன் குறிக்கப்படுவதை எடுத்தியம்பும் வேங்கடசாமி நாட்டார். கள்ளர் என்ற சொல் ஆட்சியதிகாரத்தைக் குறிக்கும் சொல் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் தொண்டையர், முத்தரையர் ஆகியோரும் கள்ளர் வகுப்பினரே என்கிறார். நாகர்களும் கள்ளர்களே என்றும், பல்லவர், பகல்வா என்று அழைக்கப்பட்டவர்களும் கள்ளர்களே என்றும் ந.மு.வேங்கடசாமி நாட்டார் குறிப்பிடுகிறார். இவ்வாறு குறிப்பிடுவதன்மூலம் கள்ளர் என்ற சொல் ஆட்சியாளர்களாக இருப்பவரைக் குறிக்கும் சொல் என்ற முடிவுக்கும் வருகிறார். நாடாண்டவர் என்ற பொருளில் நாட்டார் என்போரும் அவ்வகையினரே என்றும் அதாவது மன்னர்கள் என்ற பொருள்படக் கூறுகின்றார். அரையர் எனப்பட்ட பல்லவரும் சோழரும் கலந்த வகுப்பினர் கள்ளர்கள் எனப்பட்டனர். படையாட்சி என்ற பெயரொட்டு வருவதைக்கொண்டு

நாயக்கரும் கள்ளர்களே என்று குறிப்பிடும்பாங்கை வெளிப்படுத்துகிறார். இவ்வாறு பண்டைய மன்னர்களின், தலைவர்களின் பெயர்களைக்கொண்டு அவர்களைக் கள்ளர் வகுப்பினர் எனக்கொள்வது வரலாற்றில் பிற சாதியினரும் இருந்தனர் என்பதை மறுத்தற்கிணையானது என்பதால் கள்ளர் என்ற சொல் கள்வரைக் குறித்திலது. அது ஒரு பொதுப்பெயரென்றும் குறிப்பிடுகிறார். கள்வரைக் கோமான் என்று அழைப்பது சாத்தியமில்லை. களவு என்பது தீய வழக்கமெனும்போது அவரைக் கோமான் என்றும் அழைப்பது முரணாகையால் கள்ளர் என்ற சொல்லை ஒரு குறிப்பிட்ட செயலைப் பற்றி நின்ற சொல் எனக் கொள்ளக்கூடாது என்கிறார். “கள்ளர் என்னுஞ் சொல்லுக்குக்அரியவர், பகைவர் என்ற இரு பொருளும், இந்திர குலத்தார் என்னுஞ் சொல்லக்கு கரியவர் என்ற ஒரு பொருளும் இங்கே கொள்ளப்பட்டுள்ளன.” (ந.மு.வே.க.ச.42) என்று குறிப்பதன்மூலம் கள்ளர் என்ற சொல்லுக்குரியவர் ஒரு வகுப்பார் அல்ல என்கிறார்.

சீவக சிந்தாமணியில் உள்ள வரிகளைக்கொண்டு கள்ளர் என்ற சொல் அரசர் என்ற பொருளைத் தருவது என்கிறார். களவு செய்த குலத்தவர் என்ற பொருளில் இதைக் கொள்ளக்கூடாது என்பதற்கு அவர் தரும் விளக்கம் தர்க்க நியாயங்களை உடையதாகும். எக்குலத்தில் இத்தீய குணம் உடையவர் இல்லாதிருக்கின்றார் எனக்கேட்கின்றார். களவு செய்வோரெல்லாம் கள்ளர் என்று கொள்வது எத்தகைய அபத்தமோ அது போல்தான் கள்ளர் என்ற சொல் ஒரு வகுப்பாரை மட்டும் குறித்து நிற்பது என்கிறார். இக்குலத்தார் குறுநில மன்னர்களாகவும் இருந்திருக்கின்றனர். ஆதலால் இவ்விழிப் பெயரைச் சுமந்துகொண்டிருக்க வேண்டிய தேவையில்லை என்பதுதான் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் குரலாக இருக்கிறது. இந்நூல் தோன்றிய காலகட்டத்தைக் குறித்தும் சிறிது சிந்திக்க வேண்டியிருக்கிறது. கள்ளர்கள் என்ற வகுப்பார் இன்றைய சூழலில் எவ்வாறு மதிப்பிடப்படுகின்றனர். குற்றப்பரம்பரை சட்டத்தால் ஒடுக்கப்பட்டவர்களாகவும் அதனால் பாதிப்படைந்தவர்களாகவும் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். இதன்வழி அவர்கள் பழங்காலத்திய சமுதாயத்தில் தமக்கான வேர்களைத் தேடும் நாட்டமுடையவர்களாக மாறுவதையும் காணமுடிகிறது. இன்றைய சூழலில் இவ்வாறான வேர்களைத் தேடும்தி போக்கு பின்காலனியத்தின் விளைவாகும். ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் குரலில் கள்ளர் என்று ஒரு வகுப்பாரைக் குறிப்பிடக்கூடாது என்றும், அது அனைத்து சமுதாயத்தினரிடமும் காணக்கூடிய ஒரு குணம் என்றும் குறிப்பிடுகிறார். திருக்குறளில் களவு குறித்து கள்ளாமை என்னும் அதிகாரம் குறிப்பிடுகிறது. களவு என்பது சங்க அகப்பாடல்களில் வேறொரு பொருளில் குறிக்கப்படுகிறது. அது திருமணத்திற்கு முந்தைய யாரும் அறியாத காதலைக் குறித்து நிற்கிறது. இரண்டையும் ஒன்றுபடுத்துவது எவ்வாறு இயலாதோ அதுபோல கள்ளர் என்ற சொல்லும் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தாரை பற்றியமைந்ததல்ல என்பதை பலரும் குறிப்பிடுகின்றனர். ஆறலைக் கள்வர் என்று சங்க இலக்கியத்தில் பாலை நிலத்துக் கள்வர் குறிப்பிடப்படுகின்றனர். ஆறலைத்துக் கொள்வதென்பது பல்வேறு சமூகங்களில் இருந்திருக்கிறது. அது கள்ளருக்கேயுரிய செயலாகக் கண்டடைந்து புளகாங்கிதம்கொள்ளும் வழக்கத்தை மறுத்துரைக்கும் வண்ணமாகத்தான் ந.முட்டாரின

நாட்டார் சொல்கிறார். “இனி இவர் வீரராயினும் அரசராகவோ, படையாளராகவோ சென்று மற்றாரது நிலத்தைக் கொள்ளைக் கொண்டமையால் இப்பெயர் எய்தினராவார் என்னில், உலக சரித்திரத்தில் எந்த அரச பரம்பரையினரும் கொள்ளை கொள்வோர் என்னும் பெயருக்கு உரியராகாது தப்பவியலாது இப்பொழுது ஐரோப்பாக் கண்டத்திலுள்ள எல்லா அரசுகளும் இப்பெயரினை பெறுவதற்கு முற்றிலும் தகுதியுள்ளவை” என்கிறார். களவு என்பது ஒரு குலத்தின் குணமாகாது. மாறாக அது ஒரு சூழலின் விளைவேயாகும். வறுமையில் உள்ளவர்கள் பறித்துண்ணும் நிலைக்குத் தள்ளப்படுவது இயல்பானது. இது உலக வழக்கமாகவும் கொள்ளப்படும். சிவத்தம்பி முதலியோர் பாலை நிலத்தின் குணாம்சங்களை அவ்வாறுதான் மதிப்பிடுகின்றனர். குன்றத்தவர் யாவரும் கொடும் வெயில் காலத்தில் உணவு இல்லாத நிலையில் மழவராகவும், கள்வராகவும் மாறி விடுகின்றனர் என்று குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

ஒரு சாதியாரைக் குறித்த சொல்லாக கள்ளர் என்பதைக் கொள்ளக்கூடாது என்பதாகவே ந.மு.வேங்கடசாமி நாட்டார் கள்ளர் சரித்திரம் நூலை எழுதியுள்ளார். ஆனால் அதுவே பின்னாளில்

கள்ளர் என்னும் சாதியைப் பற்றியதாக வளர்த்தெடுக்கக் காரணமாகிறது. கள்ளர் என்போர் ஒரு சாதியினராக இருப்பதைப் பற்றிய நினைவு கொண்டவராக அவர்களின் பழக்கவழக்கங்களில் களவு என்பது காணப்படுவதில்லை என்றும் அவர்களின் வாழ்க்கைமுறை தனித்துவமான பண்புகளைக் கொண்டிருப்பதாகவும் எழுதுகிறார். அவர்களில் தலைவரானவர் அம்பலகாரர் என்றும் அவர்கள் ஊர்க்காவலில் ஈடுபடும் வழக்கமுடையவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். அம்பலகாரர்களின் காவல் நாட்டில் யாரும் திருட அஞ்சுவர் என்றும் அவ்வாறு திருடு போனது தெரிந்தால் அம்பலகாரரே பொறுப்பேற்று அப்பொருளைக் கண்டுபிடித்துத் தருவார் என்றும் அவ்வாறில்லையாயின் அம்பலகாரரே தம் பொருளைப் பகரமாகக் கொடுப்பார் என்றும் குறிப்பிடுகிறார். “காவலர் தமது காவலிலுள்ள ஊர்களில் எவ்வகையான களவும் கொள்ளையும் நிகழாமல் பார்த்துக்கொள்ளும் கடப்பாடுடையவர். களவு நிகழாமல் பார்ப்பதென்றால் தாம் சென்று காத்து நிற்பதில்லை. ஆட்களை அனுப்பி காப்பதுமில்லை. தம் வலிமையாலும், ஆணையாலுமே பாதுகாப்பவராவார். இன்னாருடைய அரசு காவலில் உள்ள ஊர் என்று தெரிந்திருந்தால் திருடர்கள் அவ்வழி செல்லமாட்டார்கள். ஒருகால் ஏதேனும் களவு நிகழ்ந்துவிடின் கிராமத்தார் அம்பலகாரருக்குச் செய்தி தெரிவிப்பர். அம்பலகாரர் தம்முடைய ஆட்களை பல இடங்களுக்கும் அனுப்பிக் களவுபோன பொருளை எவ்வாற்றாலேனும் மீட்டுக்கொடுப்பர். சில சமயங்களில் அம்பலகாரர் தம் கைப்பொருள் செலவுசெய்தும் மீட்க நேரும்” என்கிறார். அம்பலகாரர்கள் எனப்பட்டோர் கள்ளர்களில் ஒரு தலைமை வகித்து ஊர்க்காவல் பணிகளைச் செய்துள்ளனர். அவ்வாறான போக்கு இன்றும் தொடர்வதைக் காணமுடிகிறது. வரலாற்றில் கள்ளர் என்ற சொல்லைத் தனியே பிரித்தெடுத்துக்கொண்டு அதற்கொரு வரலாற்றுப் பெருமிதக் கதையாடலைக் கட்டமைப்பதை அன்றே விரும்பாதவராகவே ந.மு.வேங்கடசாமி நாட்டார் இருந்துள்ளார் என்பது அவரது நூலில் விளங்குகிறது.

அம்பலகாரரும் அகம்படியாரும்கூட வரலாற்றில் பெரும் கொடையாளர்களாகவும் வீரர்களாகவும் கூறப்படுவதைப் பற்றி எழுதுகிறார். இன்றைய தருணத்தில் அவற்றை மீள்வாசிப்புச் செய்யும் சாதிப் பெருமிதவாதிகள் சங்க இலக்கியத்திலிருந்து நாயக்கர் ஆட்சிக் காலம் வரை கள்ளர் என்ற வகுப்பார் சிம்ம சொப்பனமாக வாழ்ந்தவர்கள் என்னும் கதையாடலை உற்பத்தி செய்கின்றனர். அதன்மூலம் எளிய மக்களை ஒடுக்கும் பண்பாட்டினையும் கொண்டுள்ளனர். ஒவ்வொரு சாதியினரும் தமக்கான வரலாற்றுப் பெருமிதங்களைக் கட்டமைக்கும் சூழல், சாதிய அரசியலில் முனைப்புக் கொண்டிருக்கும் சூழலில் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின், கள்ளர் சரித்திரம், நூல் பெரிதும் முக்கியத்துவம் பெறுவதாக அமைகிறது. அடையாள அரசியலுக்கான உந்துவிசையைக் குறிப்பிட்ட வகுப்பாருக்குத் தருவதாக இருந்தாலும் அதன் மையக் கதையாடலைக் களைப்பதாகவே அவருடைய நூலின் கண்டுபிடிப்புகள் அமைகின்றன. கள்ளர் என்ற சொல்லிற்கு அவர் தரும் விளக்கங்கள் அவ்வாறே அமைந்துள்ளன.

ஊர்க்காவல் என்னும் பணியைச் செய்தவர்கள் கள்ளர்கள் என அழைக்கப்படும் முரணையும் அவர் கட்டுடைக்கிறார். மேலும் அவர் “கள்ளர் அல்லது அரையர் குலத்தவர் அரசராயும், குறுநில மன்னராயும், அமைச்சராயும் படைத்தலைவராயும் தொன்றுதொட்டு இருந்து வந்திருப்பது முன்பு காட்டிய வரலாறுகளானே அறியலாகும். இங்ஙனமே சிறந்த பக்தர்களும் ஞானிகளும் புலவர்களும் வள்ளல்களும் ஆக எண்ணிறந்த பெரியோர் இக்குலத்தில் இருந்திருக்கின்றனர்” என்கிறார். கள்ளர்கள் எவ்வாறு பக்தர்களாகவும், கொடையாளர்களாகவும் இருக்கவியலும் என்ற நிலையிலிருந்து சிந்தித்தால் அது ஒரு குலத்தின் பண்பாக அல்லாமல் அக்குலத்தார் வரலாற்றில் கொண்டிருக்கும் விரிவான பாத்திரத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

இன்றைய நிலையில் கள்ளர்கள் பற்றிய சித்திரம் எவ்வாறு தரப்படுகிறது என்பதை இணைத்துப் பார்த்தால். கள்ளர்கள் என்பவர்கள் குற்றப்பரம்பரைச் சட்டத்தினால் ஒடுக்கப்பட்டவர்கள் என்கிற சித்திரம் தரப்படுகிறது. இவ்வாறு கூறுவதன்வழி அவர்கள் தங்கள் வாழ்வியல் விழுமியங்களாகத் திருட்டையே கொண்டிருந்தார்கள் என்பது பெறப்படுகிறது. எனில் அவர்கள் திருடுவதையும் கொள்ளையடிப்பதையும் வீரச்செயலாகவும் அதற்கான உந்துதலாகவும் கொண்டிருந்தனர் என்பது பெறப்படுகிறது.

திருட்டை மானிடவியல் நோக்கில் அணுகும் ஆய்வாளர்கள் அவர்கள் நிலவுடைமைச் சமூகத்திற்கு முந்தைய விழுமியங்களைக்கொண்ட மக்கள் என்பதாக அடையாளப்படுத்துகின்றனர். நிலவுடைமைச் சமூகம் ஏற்பட்ட பின்பு உடைமைகொள்ளும் பண்பு தனியுடைமையைச் சாத்தியப்படுத்தியது. அதன்விளைவாக ஒருவருடைய சொத்தை அபகரித்தல் என்பது குற்றச்செயலாக ஆனது. ஒருவர் திருடுவது என்பது வேறு, ஒருவர் திருகுவதென்கிற குற்றத்தைச் செய்வதென்பது வேறு இரு நிலைகளில் இது வேறுபடுகிறது. திருட்டுத்தனம் ஒரு சமூகத்தில் சாகசமாகவும் போற்றுதலுக்குரியதாகவும் இருந்த நிலை என்பது வேட்டைச் சமூகத்தின் பண்பு. அந்த நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் அன்றைய வேட்டைச் சமூகப் பண்பு என்பது வேட்டையில் ஈடுபடாதார்க்கும் வேட்டைப் பொருள் பகிர்ந்தளிக்கப்படும். உணவு எதுவும் மிச்சமிருக்காது. ஏனென்றால் வேட்டைச் சமூகக் காலகட்டம் என்பது நாகரிகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையாகும். அந்நிலையிலிருந்து காவலர்கள் என்கிற நிலைக்கு அவர்கள் வரக் காரணமே வேட்டையில் ஈடுபட்ட தீரமிகு செயல்களே. அவர்களுக்கு அது திருட்டு என்ற மனப்பாங்கைத் தராது. அது உணவு சேகரித்தல் என்கிற பாங்கிலேயே உணரப்படும். இன்றைய நிலையில் அவ்வாறுதான் கடந்த காலத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் ஆட்சியதிகாரத்தில் இருந்தவர்கள், குறுநில மன்னர்களாக இருந்தவர்கள், தொண்டையர்கள், அரையர்கள் எனப் பலவாக இருந்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காகப் பிறரைச் சார்ந்திருந்தனர் என்பதும் இதில் வெளிப்படுகிறது. தங்கள் உழைப்பின் பலனைப் பிறரும் அனுபவிக்கவேண்டும் என்ற நிலையிலிருந்தே அவர்களது பிற மானியங்கள் செய்தமை, மாடங்கள் கதீ!41

அடையாள அரசியல் விசையாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய சூழலில் கள்ளர்கள் மற்றும் முக்குலத்தோர் என்போர் வரலாற்றில் கொண்டிருந்த பாத்திரத்தைப் பற்றிய பல்வேறு ஆய்வுகள் வெளிவரத் துவங்கியுள்ளன. தமிழிலக்கியத்தில் குற்றப்பரம்பரையினர் என்னும் நூல் சங்க காலத்திலிருந்து கள்ளர்கள் மற்றும் முக்குலத்தோர் பற்றிய பதிவுகளைத் தருவதாக அமைகிறது. குற்றப்பரம்பரையினர் என்ற சொல்லாட்சியைச் சங்க காலத்திற்கு எவ்வாறு பொருத்துகின்றனர் என்பதை மானிடவியல் நோக்கிலேயே புரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில் குற்றப்பரம்பரையினர் என்ற சொல்லாட்சி நவீன அரசுகளால் தரப்பட்டவை. சங்க காலத்தில் அவ்வாறான சொல்லாட்சியைக்கொண்டு ஒரு சமூகத்தார் இருந்திருக்கவில்லை. மாறாக குற்றச் செயல்களில் ஈடுபடுகிறவர்கள் பலராக இருந்திருக்கின்றனர். கோசர்கள், நாகர்கள் என்போரகூட சங்க இலக்கியத்தில் குறிக்கப்படுகின்ற குற்றப்பரம்பரையினர் ஆவர். ஆனால் குற்றம் என்பதை அரசுக்கு எதிரான செயல்களில் ஈடுபடுபவர்களைக் குறித்ததாகவே திருக்குறளில் காண்கிறோம் □களை□ என்று குறிப்பிட்டு அவர்கள் களையப்பட வேண்டியவர்கள் என்று குறிப்பிடுகிறது. அவ்வாறிருக்க கள்ளர்கள் மட்டும் குற்றப்பரம்பரையினர் என்று கூறுவதன் இதுவரை நிகழ்ந்துவந்த குற்றங்களுக்கு இப்பரம்பரையினரே காரணம் என்பதைக் கூறுவதாக அமையும். மேலும் சங்க இலக்கியத்தில் களவில் ஈடுபட்டவர்கள் பெரும்பகுதியினர் ஆவர். கள்வர் என்பதால் அவர்கள் கள்ளர்கள் என்று அடையாளப்படுத்துவதை ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் நூல் மறுதலிக்கிறது. இவ்வாறு அடையாள அரசியலை வேறுதிசையில் கொண்டும்செல்லும் பாங்கை நூலில் காணமுடிகிறது. கள்ளர் என்ற சொல் கொண்டு ஒரு சமுதாயத்தினர் தங்களைத் தாங்களே வரலாற்றில் நிறுவிக்கொள்ளும் முயற்சியைத் தடுப்பதாகவே நிலைபெறுகிறது. அவர்கள் வரலாற்றில் பல்லினத்தவராக இருந்தனர் என்கிறார். “மதுரைப் பக்கத்திலுள்ள கள்ளர்கட்கும் தஞ்சைப் பக்கத்திலுள்ளோர்க்கும் பழக்க வழக்கங்களில் இருக்கிற வேற்றுமையைத் தஞ்சை ஜில்லாது கெசட்டியர் முதலியன அறிவிக்கின்ற. இவர்கட்கும் அவர்கட்கும் இதுவரை எவ்வகையான சம்பந்தமும் இருந்ததாகத் தெரியவில்லை□ என்கிறார். இது போல் ஆங்கிலேய ஆட்சியில் குற்றப்பரம்பரையினர் என்று குறிப்பிடப்பட்ட பல்லோரில் குறவர்களும் இன்னபிற சாதியாரும் இருந்திருக்கின்றனர் எனில் கள்ளர் எனப்பட்டவர்கள் ஒரு சாதியினரை மட்டும் குறிப்பதாகக் கொள்ள முடியாது. அவர்கள் பல் இனத்தவராக இருப்பதால் வரலாறு நெடுகிலும் ஒற்றைப் பண்பு கொண்டவர்கள் ஒரே இனத்தினர் என்கிற பாங்கில் நிகழ்த்தப்படும் அடையாள அரசியலின் பாங்கு தடுக்கப்படுகிறது. அந்த வகையில் இன்றைய அடையாள அரசியலின் உந்து விசைக்கு ஒரு வகையில் கள்ளர் சரித்திரம் நூல் காரணமாக இருக்கமுடியும். ஆனால்

ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் நோக்கில் கள்ளர் என்பவர்கள் ஆட்சியில் இருந்தவர்கள். அவர்கள் ஆறலைத்துக் கொலைசெய்து பொருளை வவ்வியர்கள் மட்டுமல்ல என்பதாகும். இக்காரணங்களால் அடையாள அரசியல் மூர்க்கம் பெறுவதிலிருந்து சற்றுத் தணியச் செய்வதற்கு இந்நூல் பயன்படுகிறது.

**முதன்மைப் பிரதி**

1. ந, மு.வேங்கடசாமி நாட்டார், கள்ளர் சரித்திரம், எனி இந்தியன் பதிப்பகம், சென்னை, 2006

**பயன்பட்ட பிரதிகள்**

1. வே, இரா.மாதவன் (ப.ஆ), திறனாய்வு நோக்கில் வேங்கடசாமி நாட்டார், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2010.
2. அ. மங்கை (மொ.ஆ), அடையாள மீட்பு – காலனிய ஓர்மை அகற்றல், வல்லினம், புதுவை, 2004.
3. அ. ஜெகநாதன், இல. ஜெயச்சந்திரன் (தொ.ஆ்-), அடையாள உருவாக்கமும் அடையாள வேறுபாடுகளும், குருநானக் ஆய்வுவட்டம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 2010.
4. இரா. சுந்தரவந்தியத்தேவன், பிரமலைக் கள்ளர் வாழ்வும் வரலாறும், சந்தியா பதிப்பகம், சென்னை, 2011.
5. ந. முத்துமோகன், தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2011.